**செய்தி வெளியீடு எண் : 814** **நாள்: 9.11..2009**

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாட்டில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 2வது கம்பி வட ஊர்தியும், சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் புதிதாக கம்பிவடஊர்தியும் ரூ.12 கோடி செலவில் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.**

**பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் விலாகாப்பிடி கம்பிவட ஊர்தி (**Mono Cable fixed Grip Double reversible Zig back rope way system) **முறை தற்போது இயங்கி வருகிறது. ஆனால் விலகும்பிடி(ஆடிடே** Cable Detachable Grip) **கம்பி வடஊர்தியே பல்வேறு இடங்களில் இயங்கி வருகிறது. எனவே, தமிழக அரசு ஒரு வல்லுநர் குழுவை அமைத்து திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பிற்கு விலகும்பிடி கம்பிவடஊர்தி அமைப்பது ஏற்றதா அல்லது விலகாப்படி கம்பிவடஊர்தி அமைப்பது ஏற்றதா என்பதை ஆராய்ந்து அறிக்கை அளிக்கும்படி கேட்டுக்கொண்டது.**

**இதனை நன்கு ஆராய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை செயலர் திரு. ஜி.முத்துசாமி, இ.ஆ.ப.,அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத். இஆ.ப., மற்றும் அரசு உயரதிகாரிகளான இந்து சமய அறநிலையத்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு. கே.ஆர். கோவிந்தராஜுலு, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் திரு. ஆர். சுப்பிரமணியன், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு.தி.இராஜமாணிக்கம் ஆகியோரை உத்திராஞ்சல் மாநிலம் ஹரித்துவாரில் உள்ள மானசாதேவி மற்றும் சண்டிதேவி திருக்கோயில்களில் இயங்கி வரும் கம்பிவடஊர்தி முறையை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டார். மேற்கண்ட குழு மானசாதேவி சண்டிதேவி ஆகிய இரு திருக்கோயில்களிலும் இயங்கி வருகின்ற கம்பிவட ஊர்தியை பார்வையிட்டது. மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் மேற்கண்ட அரசு அலுவலர்கள் அனைவரும் மேலே குறிப்பிட்ட திருக்கோயில்களில் இயங்கிவரும் கம்பிவட ஊர்தியை பார்வையிட்டனர். முடிவாக திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பு நலனைகருத்தில் கொண்டு பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 2வது கம்பி வட ஊர்தியும் சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்ம சவாமி திருக்கோயில் புதிதாக கம்பி வடஊர்தியையும், ஏற்கனவே நிபுணர் குழு அளித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடியான விலகாப்பிடி கம்பிவடஊர்தி (**Mono Cable fixed Grip Double reversible Zig back rope way system) **முறைதான் சிறந்தது என்பதை கருந்தில்கொண்டு அதன்படியே அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.**

*********

**வெளியீடு**: **இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**